**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 522/2023**

**Prosecution witness : அ.சா. 14** **Date : 13.11.2025.**

| | |
|---|---|
| **Name : பாரத்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>முதல் விசாரணை</u>

1) நான் புக்கம்பட்டியில் குடியிருந்து ஹோம்அப்ளையன்ஸ் கடை நடத்தி வருகிறேன். கடந்த 2023ம் வருடம் மாலை நேரத்தில் நான் எலெக்ட்ரானிக் கடையில் இருந்த போது இருசக்கர வாகனத்தின் மீது சென்ற நபர் மீது இனோவா கார் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2) கடந்த 09.08.2023 ம் தேதி மாலை 3.30 மணிக்கு நான் எலெக்ட்ரானிக் கடையில் இருந்த போது கதிரேசன் என்பவர் TN 30 CB 2724 இரு சக்கர வாகனத்தில் அவரின் பின்னால் நந்தினி என்பவரை உட்கார வைத்துக் கொண்டு சென்றார் என்றால் எனக்கு தெரியாது. அவர்களுடைய வண்டிக்கு முன்பாக TN 30 CA 7839 வாகனத்தை பின்னால் ஒரு பெண் மணியை உட்கார வைத்துக் கொண்டு சந்திரமாள்கடை அருகே புக்கம்பட்டி ரோட்டிற்கு

செல்வதற்காக தெற்கிலிருந்து வடக்காக ரோட்டை கடந்தார் என்றால் எனக்கு தெரியாது. அப்போது ஓமலூர் நோக்கி மேற்கிலிருந்து கிழக்காக TN 54 V 7779 இனோவா கார் வேகமாக ஒட்டி சென்று மோதி விபத்து ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.14 10:37:47 +0530

Judicial Magistrate No.II,
Mettur.